**தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை மற்றும் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21ம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த தேவைப்பாடுகளில் இருந்து தவிர்ந்துகொண்ட சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| வெளிநாட்டு வள திணைக்களத்தினால் பொறுப்பளிக்கப்பட்ட ரூபா 3,500,000 பெறுமதியான பயணிகள் வாகனம் நிலையான சொத்து பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் நிதி கூற்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்க முடியாது. இந்த திணைக்களத்திற்கு தற்காலிகமாக பொறுப்பேற்றக்கப்பட்ட இரண்டு வாகனங்களினதும் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளது. |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டு கணக்கில் நடைமுறையற்ற சொத்துக்களின் பயணிகள் வாகனங்களின் (குத்தகை) இறுதி மீதி மற்றும் 2018 ஆம் ஆண்டு நிதி கூற்றுக்களில் ஆரம்ப மிகுதிக்கும் இடையே ரூபா 13.5 பில்லியன் வித்தியாசமாகும். | ஆரம்ப மீதியில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் போது நிதி கூற்றுகளின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரச கணக்கு திணைக்களத்தின் பணிப்புரையின் படி நாளதுவரையாக்கப்பட்ட குத்தகை முறையில் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்கள் உள்ளடக்கப்பட்டு உரிய முறையில் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) கணக்காய்வு சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| குத்தகை அடிப்படையில் திணைக்களத்திற்கு பொறுப்பேற்கப்பட்ட ரூபா 19 மில்லியன் பெறுமதியான 04 மோட்டார் வாகனங்கள் நிதி பெறுமதியற்ற சொத்துக்கள் கூற்றில் பயணிகள் வாகனங்களில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த சொத்துக்கள் பயணிகள் வாகனங்கள் (குத்தகை) பெறுமதியின் ஊடாக அகற்றப்பட்டதாக சாட்சியங்கள் முன்வைக்கப்படவில்லை. | சொத்துக்களின் உண்மையான பெறுமதியை நிதிக் கூற்றின் மூலம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்க முடியாது. இந்த வாகனங்களின் பெறுமதி குத்தகை பெறுமதியில் இருந்து நீக்கப்பட்டு திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. ஆகவே இரட்டை கணிப்பீடு இடம்பெறவில்லை. |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு ரூபா 6,767 மில்லியன் கட்டு நிதி கோறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 14,084 மில்லியன் கோரப்பட்டது. எனினும் திரைசேரியினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட கட்டு நிதி ரூபா 6,128 மில்லியன் மாத்திரமாகும். | கட்டுநிதியை உரிய முறையில் திட்டமிடுவதற்கும் கட்டு நிதி பயனுள்ள வகையில் முகாமை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இணங்க முடியாது. கோரப்பட்ட கட்டு நிதி உரிய முறையில் கிடைக்காமையினால் எதிர்வரும் மாதங்களில் கடந்த மாதத்தில் கிடைக்கப்பெறாத மிகுதி தொகையும் சேர்க்கப்பட்டு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு வழங்கிய ரூபா 83,325 வெளிநாட்டு பயண முற்பணம் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை உடனடியாக பெற்று கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | இந்த பணத்தை வழங்குமாறு சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.2 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருமான கணக்கில் சுமார் 03 வருட காலம் தொடக்கம் தவறான கணக்கு வைப்புக்களை செம்மையாக்கல் மாத்திரம் இடம்பெற்றதுடன், அத்திருத்தங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு கணக்கை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் அக்கணக்கில் இருந்து ரூபா 27.6 மில்லியன் பணமாக மீள செலுத்தப்பட்டுள்ளது. | இந்த வருமான கணக்கு தொடர்பாக உள்ள சிக்கல்கள் முறையாக தீர்த்து வைக்கப்பட்டு கணக்கை மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்களினால் மேற்கொள்ளப்படும் தவறான கணக்கு வைப்புக்கள் திருத்தப்பட்டமையினால் இந்த வருமான கணக்கு வைப்பிலிடுவது வருமானத்தை திருப்பிச் செலுத்துவதாக அமைந்துள்ளது. |

**2.3 செலவின முகாமைத்துவம்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவின விடயமொன்றிற்காக மிகை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் ஒதுக்கீடுகளை பயன்படுத்திய பின்னர் மிகுதியை தேறிய ஒதுக்கீட்டில் இருந்து 26 சதவீதமாக காணப்பட்டது. | வருடாந்த மதிப்பீடுகள் நடைமுறை சாத்தியமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | நிதி குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு ஜுலை வேலைநிறுத்தகாரர்களுக்காக வழங்கப்பட்ட தொகை மீள் நிரப்புவதற்கு தேவையான தகவல்கள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் வெளிநாட்டு பயணங்களுக்கு வரையறுக்கப்பட்டதுடன், இந்த தொகை சேமிப்பு ஏற்பட்டது. |
| (ஆ) | வருடாந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாத விடயங்களுக்கான செலவின மீள்நிரப்பு மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கீடுகள் பெற்று கொள்ளப்பட்டதுடன், அதன் சேமிப்பு தேறிய ஒதுக்கீட்டில் 16 சதவீதமாகும். | -மேற்படி- | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (இ) | ஏதேனுமொரு செலவின தலைப்பிற்கு நேரடியாக ஒதுக்கக்கூடிய மற்றும் ஆண்டுதோறும் செலவிடப்படும் விடயங்களுக்கான குறைநிரப்பு உதவிச் சேவை மற்றும் அவசர தேவைகளுக்கான பொறுப்பின் கீழ் ஒதுக்கடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறைநிரப்பு சேவை மற்றும் அவசர தேவைகளுக்கான பொறுப்பு தலைப்பின் கீழ் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல், விசேட சந்தர்ப்பங்கள் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டும். | இணங்க முடியாது.<br><br>சகல திணைக்களங்களுக்கும் இதுபோன்ற நலன்புரி வேலைத்திட்டங்களுக்கு தேவையான ஒதுக்கீடுகள் மற்றும் அவசர தேவைகளுக்கான பொறுப்பு செலவீனங்களில் நலன்புரி வேலைத்திட்டங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஈ) | 03 விடயங்களுக்கான செலவினங்கள், நி.பி 66-69 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்ற 18 முதல் 320 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. | வருடாந்த ஒதுக்கீட்டு தேவைகளின் படி நடைமுறைச் சாத்தியமாக மேற்கொள்ளப்ப | எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் பல தடவைகள் சீர்த்திருத்தப்படுவது போன்ற காரணங்களில் நி.பி 66 இன் மூலம் ஒதுக்கீடுகளை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | ட வேண்டும். | |
| (உ) | செலவின விடயம் ஒன்றிற்கான அடிப்படை மதிப்பீட்டின் நி.பி மாற்றங்களின் கீழ் ரூபா 28 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் இது ரூபா 27.9 பில்லியன் மீண்டும் வேறு தலைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது டன், ரூபா 71.2 மில்லியனாக நிதி ஏற்பாடுகள் அங்கிருந்தது. | நி.பி மாற்றல்கள் தேவைக்கேற்ப மாத்திரம் மேற்கொள்ள உரிய பணிகளை மேற்கொள்ளல். | இணங்குகின்றேன். |

**2.4 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை ஏற்படுத்தல்**

------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | செலுத்தப்பட்ட பெறுமதி மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுக்களின் படி 05 பொறுப்புகள் தொடர்பாக ரூபா 4,592,531 வித்தியாசம் காணப்பட்டது. | பொறுப்புக்கள் கூற்றில் உள்ள மீளப்பெற்றவை களுக்கு மாத்திரம் செலுத்த நடவடிக்கை எடுத்தல். | பொறுப்புக்கள் கூற்றுக்கு ஏற்ப பெறுமதி மற்றும் வவுச்சர் பெறுமதிக்கும் இடையே பல்வேறு காரணங்களினால் ரூபா 4,952,531 ஆன மொத்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) | போதியளவு ஒதுக்கீடுகள் இருப்பதை உறுதிப்படுத்தாமல் ரூபா 663,968,955 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள முன்னர் அதற்கான செலவின விடயங்களில் போதிய ஒதுக்கீடுகள் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **அவதானிப்புகள்** | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| 2010 திசெம்பர் 31 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் இலக்கம் 150 | 03 திணைக்களங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட 08 வாகனங்களுக்கான குத்தகைகள் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிறைவடைந்திருந்த போதிலும் அவ்வாகனங்களை பொறுப்பளிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடையவில்லை. | குத்தகை செலுத்தி முடிக்கப்பட்ட வாகனங்கள் உரிய நிறுவனங்களுக்கு அவற்றை முறையாக ஒப்படைப்பது கணக்கு வைப்பது ஆவணங்களை நாளதுவரையாக்கப்பட வேண்டும். | இணங்க முடியாது. தவணை கட்டணங்கள் செலுத்தி முடிக்கப்பட்ட வாகனங்களை பொறுப்பேற்பது தொடர்பாக குறித்த நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) வரவு செலவு திட்டத்தின் 18 பிரேரணைகள் முற்றாக செயற்படுத்தப்படாத நிலையில் 10 யோசனைகளுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டமையினால் 47 யோசனைகளுக்கு | வரவு செலவு திட்ட யோசனைகள் பொருளாதார ரீதியாகவும் பயனுள்ள விதத்தில் முறையாக நிறைவேற்ற தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள | இணங்குகின்றேன்.<br><br>நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல தேவையான மேலதிக ஒதுக்கீடுகளை மேற்கொள்ள ஒதுக்கீடுகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அவற்றை பயன்படுத்தாத வகையில் ஒதுக்கீடுகளை உரிய முறையில் செலவிட வேண்டிய பிரிவுகளுக்கு மாற்றப்பட்டு மொத்த ஒதுக்கீடுகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்ட தொகை குறைப்பயன்பாடாக அமைந்தமையினால் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை. | முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய பொருளாதார சபையை ஏற்படுத்துவதற்கான மீண்டெழும் செலவு ரூபா 270 மில்லியன் மூலதன செலவாக ரூபா 30 மில்லியன் நிதி ஆன போதிலும் நிதி செயல் முன்னேற்றத்தின் அடிப்படையில் மீண்டெழும் செலவு ரூபா 70 மில்லியன் ஆகவும் முலதன செலவு ரூபா 230 மில்லியன் காணப்பட்டது. | மதிப்பீடுகளை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க நடவடிக்கைளடுக்க வேண்டியமை. | குறித்த செலவீனங்களை பொறுப்பேற்கும் நிறுவனங்களின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் தேவைக்கேற்ப கவனத்திற்கொண்டு தேவைக்கு ஏற்ப நி.பி 66/69 இன் கீழ் ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டுள்ளன. |

**3.2 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | அரச சேவையில் துறைசார் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான குத்தகை கட்டணத்தை செலுத்தி முடிப்பதற்கு ரூபா 247.6 மில்லியன் நிதி வைப்பு கணக்கில் திரட்டியிருந்த போதிலும் 2019 மே 22 ஆம் திகதி வரை அது சீர்செய்யப்படவில்லை. | துரிதமாக தீர்ப்பதற்குரிய ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை. | குறித்த விபரங்கள் கிடைக்கும் வரை தீர்த்து வைக்க முடியாது |
| (ஆ) | திணைக்கள சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட அதிகாரியொருவரிடம் | - மேற்படி - | இந்த கடன் மீதியை தீர்க்குமாறு கம்பஹா வலய கல்வி அலுவலகத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து பெற வேண்டிய ஒரு வருடத்திற்கும் கூடுதலான பழைய கடன் 150,014 ரூபா 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை கிடைக்கப்பெறவில்லை. | | அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 15 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் இருந்துவரும் இரண்டு இறந்த அதிகாரிகளிடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 305,621 கடன் பாக்கி 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ம் திகதி வரை தீர்க்கப்படவில்லை. | - மேற்படி - | இந்த மீதியை சீர்செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஈ) | கடமையை விட்டுச் சென்ற 2 அதிகாரிகளிடம் இருந்து கிடைக்க வேண்டிய மொத்த கடன் தொகை 307,599 ரூபா ஆகும் | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கடமையை விட்டு சென்றுள்ள ஒரு அதிகாரியிடம் இருந்து அரசாங்கத்துக்கு பெற்று கொள்ள வேண்டிய தொகையை பெற்று கொள்வதற்கு சட்ட மாஅதிபர் திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், மற்றைய அதிகாரியின் கடன் மீதியை தொகையை பெற்று கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களின் கீழ் குறிகாட்டிகளை அடிப்படையாக கொண்டு அந்நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளை அடையாளம் காண்பது மற்றும் அதனை எட்டுவது தொடர்பாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பில் தயாரிக்கப்பட்ட திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. |

பாராளுமன்றத்தின் கவனம் ஈர்க்கப்படவிருந்த போதிலும் அவற்றை நிறைவு செய்ய போதிய கவனம் செலுத்தப்படவில்லை.